இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள். (கொலோ 3:1-4)

# உயிர்ப்பு ஞாயிறு போர் நிறுத்தத்திற்கு திருத்தந்தை அழைப்பு!



**வத்திக்கான்:** உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் கடுமையான தொடர் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும், மற்றும் போரினால் சிதைந்துள்ள உக்ரைனில் அமைதி நிலவுவதற்கு, உண்மையான பேச்சுவாரத்தைகள் இடம் பெறவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 10, கடந்த ஞாயிறன்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அன்றைய தினம் காலையில், வத்திக் கானின் புனித பேதுரு வளாகத்தில் குருத்தோலை ஞாயிறு திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றியபின், மூவேளை செப உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆயுதப் பயன்பாடு நிறுத்தப்படட்டும், மற்றும் உயிர்ப்பு ஞாயிறு போர் நிறுத்தம் துவக்கப்படட்டும் என்று உருக்கமாக விண்ணப்பித்துள்ளார்.

மூவேளை இறைவேண்டலில் அன்னை மரியாவிடம் நாம் வேண்டும்போது, “கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்று, வானதூதர் அன்னை மரியாவுக்குக் கூறியதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் என்று உரைத்த திருத்தந்தை, போரையும் அவரால் முடிவுக்குக் கொணர முடியும் என்று கூறினார்.

## கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை

ஒவ்வொரு நாளும், மிகக்கொடிய படுகொலைகளையும், அப்பாவி மக்களுக்கு எதிராக மிகக் கேவலமான கொடூரங் களையும் நம்முன் நிறுத்துகின்ற போர், முடிவுக்குவராது என்ற எண்ணத்தை ஏற்படுத்தினாலும், அதை முடிவுக்குக் கொணர கடவுளால் முடியும் என்றும், இக்கருத்துக்காக இறைவேண்டல் செய்யு மாறு புனித பேதுரு வளாகத்தில் அமர்ந்திருந்த ஏறத்தாழ 65 ஆயிரம் திருப்பயணிகளிடம் திருத்தந்தை கூறினார்

## உயிர்ப்பு போர்நிறுத்தம்

ஆண்டவராம் இயேசு கிறிஸ்து, பாவம் மற்றும், மரணத்தின் மீது அடைந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு, கிறிஸ்தவர்கள் இவ்வாரத்தில் தங்களையே தயாரித்துவருவதை நினைவுபடுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த வெற்றி, பாவம் மற்றும் மரணத்தின் மீதுதானே தவிர, யாரோ ஒருவர் மீதும், யாரோ ஒருவருக்கு எதிரானதும் அல்ல என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

தற்போது நடைபெறும் போரை, உலகின் வழிமுறையில் வெற்றிகாண ஏன் முயற்சிக்க வேண்டும் என்றும், இது தோல்வியின் வழிமுறை மட்டுமே என்றும் கூறியத் திருத்தந்தை, தீமையின் ஆதிக்கத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்கு சிலுவையைச் சுமந்த கிறிஸ்து வெற்றியடைய ஏன் நாம் அனுமதிக்கக் கூடாது? என்ற கேள்வியையும் எழுப்பினார்.



வாழ்வு, அன்பு மற்றும் அமைதி ஆகியவை ஆட்சிசெய்யும் வண்ணம் கிறிஸ்து இறந்தார், எனவே, ஆயுதப் பயன்பாடு நிறுத்தப் படட்டும். மற்றும் உயிர்ப்புப் பெருவிழா போர்நிறுத்தம் துவக்கப்படட்டும் என்று மீண்டும் அழைப்புவிடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## இடிந்த கட்டடங்களில் கொடியை ஊன்றுவதில் வெற்றி கிடையாது

ஆயுதங்களை அதிகம் வழங்குவது, போரை மீண்டும் தொடங்குவதாகவே இருக்கும், இது போர் நிறுத்தத்திற்கு உதவாது எனவும், உண்மையான உரையாடல் வழியாக, அமைதிக்கு இட்டுச்செல்லும் போர்நிறுத்தமே தேவைப்படுகின்றது எனவும், இதற்கு, மக்களின் பொது நன்மைக்காக சில தியாகங்கள் தேவைப் படுகின்றன எனவும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

உண்மையில், இடிந்த கட்டடங்களில் கொடியை ஊன்றுவதில் வெற்றி கிடையாது எனவும் உரைத்த திருத்தந்தை, “கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்பதை மீண்டும் நினைவுபடுத்தி, நம் விண்ணப்பங்களை அன்னை மரியாவின் பரிந்துரையுடன் சமர்ப்பிப்போம் என்று கேட்டுக்கொண்டார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ்: வத்திக்கான்*

# கெனிங்காவ் மறைமாவட்ட ஆயரின் பாஸ்கா பெருவிழா செய்தி

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து என்றென்றும் வாழ்கிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதற்காகவும், ‘இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’ (மத் 28:17) எனும் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வாழும் நாம் அவரது வாரத்தையை ஏற்று அவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

காட்டிக்கொடுத்தல், பாடுகள் மற்றும் மரணத்தை சந்திக்க நேரிடும், ஆனாலும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் என்று இயேசு சொன்னபோது அவருடைய சீடர்களின் நம்பிக்கை என்னவாக இருந்தது என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். அவர்கள் இயேசுவின் வாரத்தையை எப்படி உணர்ந்தார்கள் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்கவேண்டும் - அவர் உயிர்த்தெழுந்த நாள் வரை நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் இடையிலான ஓர் சந்நேக உணர்வில் மூழ்கியிருந்தனர். அதே வேளையில் அந்நாளில் அவர்கள் மத்தியில் அவருடைய தோற்றத்தைக் கண்டு சிலர் நம்பினார்கள், சிலருக்கு தொடர்ந்து சந்தேகம் ஆட்கொண்டிருந்தது (மத் 28:17).

கோவிட்-19 தொற்று, அத்தோடு ஏறக்குறைய உலகம் முழுவதும் இயற்கைப்



பேரழிவுகள், மியான்மர் மற்றும் உக்ரைனில் நடந்து வரும் வன்முறைகள் போன்ற அனைத்து வகையான கவலையளிக்கும் பயமுறுத்தும் நிகழ்வுகளுடன், இன்றைய நமது உலகின் நிலைமையைப் பார்க்கும், சிந்திக்கும் போது - அவை எவ்வாறு நமது நம்பிக்கையைப் பாதிக்கின்றன? கடவுளின் உடனிருப்பு மற்றும் அவரது பாதுகாப்பு நமக்கு உண்டு என்று எண்ணத் தோன்றுகிறதா? சந்தேகங்கள் நம் எண்ணங்களைக் கட்டுப்படுத்த ஆரம்பித்துவிட்டனவா? கடவுளின் உடனிருப்பு மற்றும் இரக்கத்தை நம்பாதவர்கள் சொல்வது போல், "கடவுள் இருக்கிறார் என்றால், அல்லது நம் மத்தியில் இருந்தால், அவர் ஏன் இதையெல்லாம் அனுமதிக்கிறார்?" என்று எண்ணத்தோன்றும்.

சகோதர சகோதரிகளே, பாஸ்கா பெருவிழா நமக்கான பெருவிழா. நமது எதிர்நோக்கையும் நம்பிக்கையையும், கடவுள் மீதான அன்பையும் புதுப்பிக்கவும், உறுதிப்படுத்தவும் ஒரு வாய்ப்பாக இவ்விழா அமைகிறது. தூய ஆவியாரின் வழிகாட்டுதலுடனும் வல்லமையுடனும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு, அதிகாரம் பெற்ற, சமூக உணர்வில் வாழ்ந்து, ஒருவருக்கொருவர் நலனில் அக்கறை கொண்டு, கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி அறிவிப்பை தொடக்கக் கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்வோம். (திப. 2: 41-47; 4: 32-33) தூய ஆவியாரின் உதவியோடும், போதனையோடும், நினைவூட்டுதலோடும், கன்னி மரியாவின் துணையோடும், புதிய பாஸ்கா மக்களாக நமது ஒன்றிணைந்த பயணமானது தற்காலத்து கவலை யளிக்கும் மற்றும் பயமுறுத்தும் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள் ளவும் வெற்றிபெறவும் உதவும் என்று நாம் நம்புவோம். ஏனென்றால் நம் ஆண்டவர் இயேசு. உயிர்த்து இப்போது என்றும் நம்முடன் இருக்கிறார்.

இந்த பாஸ்கா பெருவிழாக் கொண்டாட்டம் நம்மில் ஒரு புது அனுபவத்தைக் கொண்டுவருவதோடு, நம்மிலும், குடும்பத்திலும், சமூகத்திலும் கிறிஸ்துவின் வழிகாட்டுதலில் நமது நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தட்டும்.

உங்கள் அனைவருக்கும் ஆசீர் நிறைந்த பாஸ்கா பெருவிழா வாழ்த்துக்கள்

Rt Rev Datuk Cornelius Piong
Bishop of Keningau

# திருத்தைலத் திருப்பலிகள் மறைமாவட்டங்களில் கொண்டாடப்பட்டன!

## மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்

கடவுளைச் சந்திக்க ஓர் இடத்தை மக்கள் தேடுகிறார்கள்!

மலாக்கா—ஜொகூர் மறைமாவட்டடம் அதன் பன்மொழி திருத்தைலத் திருப் பலியை கடந்த ஏப்ரல் 12, 2022 அன்று கூலாய் கிறிஸ்து அரசர் பங்கில் கொண் டாடியது.

ஆயர் பெர்னார்ட் பவுல் அவரது தொடக்க உரையில், "இன்று, இறைமக்களுக்கும் எங்களது குருத்துவத்துக்குமான எங்கள் உறுதிமொழிகளையும் அர்ப்பணிப்பையும் புதுப்பிக்க நாங்கள் இங்கு வந்துள்ளோம். நாங்கள் அருள்பணியாளர் சமூகம் என்று அழைக்கப்படுகிறோம் - நாங்கள் மக்களிட மிருந்துத் தோன்றிய மற்றும் மக்களுக்கான அருளப்பட்ட அருள்பணியாளர்கள். சமூகம் இல்லாமல் அருள்பணியாளர் இல்லை. சமூகம்தான் அருள்பணியாளர்களை அனுப் புகிறது மேலும் அவர்களைப் பெற்றும் கொள்கிறது என்றார்.

தொடர்ந்து, நாங்கள் பலவீனமானவர்கள் என்பதை அறிவோம்; மனந்திரும்பி தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் வேண் டும் என்பதையும் நாங்கள் அறிவோம், மேலும் கடவுளின் அருளால் நாங்கள் மேன்மைபெற்று சிறந்த அருள்பணியாளர் களாக மாறவும் இயலும்.

**"ஒரு நிலைப்பாட்டை உருவாக்குங்கள், கேட்கப்படுங்கள்"** என்பது மறைமாவட்டத் தின் கருப்பொருளாகும். காந்தி, மார்ட்டின் லூதர் கிங் போன்றோர் அவர்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டை நாம் நினைவுகூர்வோம். இவ்வாறு நாமாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும் அல்லது குரல்கொடுக்க இல்லாதவராக இருந்தாலும் சரி எப்போதாவது, எங்காவது, நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என் பதை ஆயர் அவர்கள் வலியுறுத்தனார்.

'மற்றவர்களைக் காப்பது போல் உங்களை யும் காத்துக்கொள்ளுங்கள்' அருள்பணி யாளர்களாகவும் பங்குத் தலைவர்களாகவும் பணியேற்றிருக்கும் நாம் மற்றவர்களை விட நம்மை முக்கியமானவர்களாகக் கருதினால் நமக்கு மீட்பு கிட்டாது. மற்றவர்களை மீட்க நாம் பாடுபட வேண்டும் அப்போதுதான் கடவுள் நமது மீட்புக்கு அருள்புரிவார் என்று அருள் பணியாளர்கள் குழாமிற்கு அறிவுறுத்தினார்.

## கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

புதிய வாழ்வின் நம்பிக்கையில் எழுவோம்!

*வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் (யோவான் 20:1)*

இறைவனின் உயிர்த்தெழுதலை கொண் டாடும் இவ்வேளையில், இது போன்ற பெருந்தொற்று காலத்தில் பாஸ்கா பெருவிழா கொண்டாட்டத்தின் பொருள் என்ன என்று சிலர் கேட்கலாம். கடந்த இரண்டு ஆண்டுகளாக தொற்றுநோயால் நாம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தோம். பலர் இன்னும் தங்கள் அன்புக் குரியவர்களின் இழப்பிலிருந்து மீண்டு கொண்டிருக்கலாம். மற்றவர்கள் பொருளா தார சிக்கல்களிலிருந்து மீள இன்னும் போராடிக் கொண்டிருக்கலாம்.

உக்ரைனில் விரிவடைந்து வரும் போரின் அச்சுறுத்தலால் உலகம் முழுவதும் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. மேலும் உலகின் பல பகுதிகளில் சிறுபான்மை யினருக்கு எதிரான துன்புறுத்தல் செய்திகளால் நாமும் தொடர்ந்து தாக்கப்படுகிறோம். எதிர்பாராத வழிகளில் மரணம் நம் மீது நிழலாடுகிறது. இப்படிப்பட்ட சவால்கள் மத்தியில் நம்பிக்கை இன்னும் நிலைக்குமா?

பலர் தங்கள் துன்பங்கள், இழப்புகள் மற்றும் அநீதிகளில் சிலுவையின் பாரத்தைச் சுமந்திருக்கிறார்கள். ஆனாலும் சிலுவை நமது நம்பிக்கை, வாழ்க்கை மற்றும் வாக்குறுதியின் சின்னமாகும். சிலுவை மரணத்தையும் மீட்பையும் வெளிப்படுத் தும் அடையாளமாகும்.

சீடர்கள் வெறுமையான கல்லறையை எதிர்கொண்டதால் அவர்கள் குழப்பம் மற்றும் ஏமாற்றம் அடைந்ததை நற்செய்தி கூறுகிறது. பாஸ்கா செய்தியின் மையமாக அமைவது, வேரூன்றிய நம்பிக்கையின் மையின் பின்னணியில் ஒரு புதிய எதிர்காலத்திற்கான அழைப்பாகும். பாஸ்கா பெருவிழா என்பது நமக்கான புதிய தொடக்கங்களைப் பற்றியது.

சிலுவையில் அறையப்பட்ட சூழலிலிருந்து உயிர்த்தெழுதலின் வெளிச்சத்திற்குக்



கடக்கத் துணிந்த மேரி மக்தலா மற்றும் சீடர்களைப் போலவே, நாமும் தொற்றுநோயின் குளிர்காலத்திலிருந்து உள்ளூர் வசந்தத்திற்கு நகர்கிறோம். ஆரம்பகால திருஅவை ஆண்டவரின் உயிர்ப்பை நம்பிக்கையின் காலமாகவும், புதுப்பிக்கப்பட்ட தொடக்கமாகவும் பார்த்தது போல, இக்காலத்தை நமது புதிய தொடக்கமாக ஆக்குவோம். இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட புதிய வாழ்க்கையை மீட்டெடுப்போம்.

ஆரம்பகால திருஅவை ஆண்டவரின் உயிர்ப்பை நம்பிக்கையின் காலமாகவும், புதுப்பிக்கப்பட்ட தொடக்கமாகவும் பார்த்தது போல, இக்காலத்தை நமது புதிய தொடக்கமாக ஆக்குவோம். இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட புதிய வாழ்க்கையை மீட்டெடுப்போம்.

கத்தோலிக்கர்களாகிய நாம் இரக்கத்து டனும், ஒற்றுமையுடனும், துன்பப்படு வர்கள் மற்றும் மிகவும் பாதிக்கப் படக்கூடியவர்களைக் கவனித்துக்கொள்ளும் பணிக்கு அழைக்கப்படுகிறோம். இது நம்பிக்கையின் உண்மையான அடையாளம். பாஸ்கா பெருவிழா சீடர்கள் இயேசுவின் மரணத்தின் மீது கொண்ட சோகத்தை அறிவிக்கவில்லை, மாறாக அவரது உயிர்த்தெழுதலின் பகிர்வு, நிலைவாழ்வின் வாக்குறுதி, தூய ஆவியாரின் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை வெளிப் படுத்தியது.

இந்த பாஸ்கா காலம் முழுவதும் உயிர்த்த கிறிஸ்துவின் அமைதி உங்கள் இதயங்களில் குடிகொள்வதாக. மேலும் நீங்கள் மகிழ்ச்சி யினாலும் நம்பிக்கையினாலும் நிரப்பப் படுவீர்களாக. உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட பாஸ்கா பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பேராயர், ஜூலியன் லியாவ், கோலாலம்பூர் மாமறைமாவட்டம்,*

## கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் பிறரின் இன்ப துன்பங்களைப் பகிர வேண்டும் ...

உலக அளவில் ரமதான் நோன்பு மாதம் துவக்கப்பட்டிருப்பதையொட்டி, ஏப்ரல் 08, கடந்த வெள்ளியன்று, உலகில் வாழ்கின்ற அனைத்து முஸ்லிம்களுக்கும் நல்வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ள திருப்பீட பல்சமய உரை யாடல் மன்றம், நாம் பகிர்ந்து வாழ்கின்ற மனித சமுதாயத்திலிருந்து பிறக்கின்ற உடன்பிறந்த உணர்வு நிலையின் அடையாளமாக, ரமதான் மாதமும், நோன்பு பெருநாள் கொண்டாட்டமும், பலனுள்ளதாக அமைய வாழ்த்துவதாகத் தெரிவித்துள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றால், நம் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட, உலகெங்கும் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இத்தொற்றால் தாக் கப்பட்டவர்கள் மற்றும், அதிலிருந்து குணமானவர்கள், நீண்ட கால வேதனைகளை அடைந்துள்ளனர் என்றுரைக்கும் அச்செய்தி, பெருந் தொற்றால் இறந்தவர்கள், மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செபிப்ப தாகவும் கூறியுள்ளது.

## கண்டனர் . . . நம்பினர் . . .

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது; ஆர்ப்பரித்து அகமகிழ வேண்டிய நாளிது. ஆண்டவர் உயிர்த்தார் அல்லேலூயா. இன்றைய முதல்வாசகத்தை, திருத்தூதர் பணிகள் நூலில் இருந்து நாம் வாசிக்கும்போது, ஒரு புதிய பேதுருவை காண்கிறோம். அச்சத்தால் நடுங்கி, தன்னுடைய உயிருக்கும் ஏதும் பங்கம் வந்துவிடுமோ என்ற பயத்தால், மூன்றுமுறை தெரியாதென்று சொன்னவர், எண்ணற்ற மக்கள்முன் இயேசுவைப் பற்றி சாட்சியம் கூறுகிறார். இயேசு உயிர்த்து விட்டார்; அதற்கு நாங்களே சாட்சிகள். ஒன்றல்ல, இரண்டல்ல, பதினொருவரும் சாட்சிகளாக மக்கள் முன் நிற்கின்றனர். எது பேதுருவை அவருடைய அச்சத்தினின்று துணிவுக்கு வெளிக்கொண்டுவந்தது? ஆண்டவரின் மீதிருந்த நம்பிக்கை மனிதர் மீதிருந்த அச்சத்தைவிட மேன்மையானது.

மெசியாவைப் பற்றியும் அவரின் வாழ்வுபற்றியும் நாம் சிந்திக்கும்போது, கட்டுவோர் புறக்கணித்த கல்லே, வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று என்று முன்னறிவித்த கூடுதலாக, இது ஆண்டவரின் கைவண்ணமையால் மட்டுமே நிகழக்கூடியது என்று எடுத்தியம்புகிறார். ஆம், ஆண்ட வரின் செயல்களை மனிதராகிய நாம் அறிந்துகொள்ளவும், கண்டுணரவும் நமக்குத் தேவை அவர்மீது அசைக்கமுடியாத நம்பிக்கை.

இரண்டாம் வாசகத்தில் பவுல், நம்முடைய செயல்களைக் கொண்டே நாம் யாரைச் சார்ந்திருக்கிறோம் என்று உணர்ந்து கொள்ள அழைக்கிறார். தண்ணீர் அது சார்ந்த நிலத்தைப் போல் தான் இருக்கும். செம்மண்ணில் ஓடினால் செந்நீராக இருக்கும். தூய்மையான இடத்தில் பாய்ந்தால் அதன் நிறமும் குணமும் தூய்மையாய் இருக்கும். அதுபோல் தான் நாம் கிறிஸ்துவைச் சார்ந்திருந்தோ மென்றால், கீழானதையோ, பாவத்தையோ, கடவுளுக்கு அருவருப்பானதையோ நம் எண்ணம் நாடாது.

இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் உயிர்ப்புப்பெருவிழா நமக்கெல்லாம் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுகின்றது. யோவான் நற்செய்தியில் இந்த உயிர்ப்புச் செய்தியை அதாவது இயேசு கல்லறையில் இல்லையென்ற செய்தியை முதலில் மகதலா மரியா திருத்தூதர்களிடம் அறிவிக்கின்றார். அங்குக் கண்ட காட்சியை தமக்குள்ளே வைத்துக்கொள்ளாமல் சீடர்களிடம் அறிவிக்க ஓடினார். அத்தருணமே நற்செய்தி அறிவிப்புப் பணியை அவர் தொடக்கி வைத்தார்.

மரணத்தை வென்ற மாவீரன். வெற்றி வீரராய் உயிர்த்து விட்டார் எனும் செய்தியை பெண்கள் சீடர்கள் அறிவித் தனர். அவர்களது சந்திப்பின் நம்பிக்கை நங்கூரமானது. இன்றைக்கு உயிர்த்த இயேசுவை இறைவேண்டலில், தியானத்தில், அருளடையாளத்தில் சந்திக்கும் நாம் எப்படி முழக்கமிடுகிறோம்? உயிர்ப்பு இல்லையேல் கிறிஸ்து இல்லை. கிறிஸ்து இல்லையேல் திருஅவை இல்லை. அவரின் உயிர்ப்பிலே கட்டப்பட்டவர்களே நாம் அனைவரும். வெகுண்டெழுந்து வீறுகொள்ள வேண்டிய வர்களாகிய நம்மை தூய ஆவியார் எழுப்புகிறார், எழுப்பிக்கொண்டே இருக் கிறார். "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்றார் இயேசு (யோவா 11: 24-25). இயேசு கூறும் இவ்வார்த்தைகள், யாரெல்லாம் அவர்மீது நம்பிக்கை கொண்டு வாழ்கின்றார்களோ அவர்கள் இறந்தபின்னும் வாழ்வார்கள் என்பதை எடுத்துரைக்கிறது. அவர் உயிர்த்தார் நம்மையும் உயிர்ப்பிப்பார். இதற்கு அவரில் நமது நம்பிக்கை உறுதிபட வேண்டும்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**பாஸ்கா பெருவிழா ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | திப. 10: 34, 37-43 |
| தி. பாடல்: | 118: 1-2, 16-17, 22-23 |
| 2ம் வாசகம்: | கொலோ 3: 1-4 |
| நற்செய்தி: | யோவான் 20: 1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2திருப்புகழ் மாலை- பாஸ்கா ஞாயிறு**